**கண்டி மாநகர சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாநகர சபையின் 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளளவாறு கண்டி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்,மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில், என்னால் மேற்கொள்ளப்பட்டபரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக வீதவரி பில்லிடல் நிதிக்கூற்றுக்களில் ரூபா 8,610,518 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது இந் நிலைமையை சரிசெய்வதென. | பில்லிடப்பட்ட வீதவரி வருமானத்தை சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக நீர் கட்டண பில்லிடல் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,776,993 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வருமான செலவு கணக்கு அட்டுறு அடிப்படையில் மற்றும் வெட் அறிக்கை பண அடிப்படையில் தயாரிக்கப்படுவதனால், வித்தியாசமொன்று காணப்படுவதுடன், இது தொடர்பாக பரிசோதித்து எதிர்காலத்தில் அறிக்கையொன்றை பெற்றுத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக நீர் கட்டண வருமானத்தை நிதிக்கூற்றுக்களிலும் காட்ட வேண்டும். |
| (இ) | மாநகர சபைக்கு சொந்தமான நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடங்கிய 211 கட்டிடங்களின் பெறுமதிகளை மதிப்பிட்டு அல்லது நிதிக்கூற்றுக்களில் காட்டியேனும் இருக்கவில்லை. | இவ்வாண்டில் மதிப்பீடு செய்வதனை பூர்த்தி செய்து பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | கட்டடங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,984,450 ஆன 02 வாகனங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | வழங்கல் பிரிவிலிருந்து தகவல்களை பெற்று 2022 ஆண்டில் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்கிறேன். | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2017 ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை 18 சந்தர்ப்பங்களில் வேறு நிறுவனங்களிற்கு முற்கொடுப்பனவாக கொடுப்பனவு செய்திருந்த ரூபா 4,776,282 இற்கான கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த அனைத்து முற்பணங்களையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | முற்கொடுப்பனவிற் குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 14 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த கணக்கு மீதி மற்றும் அட்டவணைகள் பிரகார மீதிகளுக்கிடையில் ரூபா 698,885,040 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | இது தொடர்பாக விளக்கமளித்தலொன்றை மிக விரைவில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளிற்காக அட்டவணை மற்றும் அறிக்கைகளை சரியாக தயாரிக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 299,577,997 ஆன 03 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 476,505,857 ஆன் 02 பொறுப்பு விடயங்களிற்கான அட்டவணை,பண்டக கணிப்பீட்டறிக்கை மற்றும்கடன்படுனர் பேரேட்டு மீதிகள் ஆகிய தகவல்கள் சமர்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | குறித்த பதிவேடுகளை தயாரித்தல் தாமதித்துள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன், எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு விடயங்களிற்கான சான்றுகளை சரியாக பேணிச் செல்ல வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2004 ஒக்டோபர் 11 திகதி மற்றும் இலக்கம் 118 கொண்ட வரவு செலவு சுற்றறிக்கையின் 1.1.7 பந்தி | இடமாறிச் சென்று 03 மாத காலத்தை விஞ்சிய 179 அலுவலர்களிலிடமிருந்து அறிவிட வேண்டிய ரூபா 10,021,227 கடன் மீதிகளை அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிரதான செயலாளர் ஊடாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | இடம் மாறிய ஊழியர்களின் கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாநகர சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 565,729,320 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 609,888,349 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மற்றும் விதவைகள் அநாதைகள் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,226,725 ஆன பங்களிப்புத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்காது சம்பள கடன்கொடுனராக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஏனைய கொடுப்பனவுகளையும் செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையை செலுத்தி முடிக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 239,822,872 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் ஒரு அலகில் வரி நிலுவைரூபா 1,000,000 | வீதவரி அறவிடுவது தொடர்பாக சட்ட ரீதியான பிரச்சினைகள், நீண்ட கால பிரசச்சினைகள் மற்றும் | அறவிட வேண்டிய வீதவரி வருமானத்தை பல நிகழ்ச்சித்திட்டங்கை |

| | | | |
|---|---|---|---|
| | இனை விஞ்சிய 18 அலகுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 38,547,647,ரூபா 100,000 முதல் ரூபா 1,000,000 இடைலான 584 அலகுகனிலிருந்து பெற வேண்டிய ரூபா 124.433,650 மற்றும் 586 அரச ஆதன அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,944,181 உள்ளடங்கப்பட்டிருந்தன. | ஏனைய காரணங்களினால் நிலுவை மீதி காணப்படுவதுடன்,அறவிடுவ தற்காக பல செயற்பாடுகளை செயற்படுத்தியுள்ளதாக. | ள செயற்படுத்துவதன் மூலம் அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டினுள் வியாபார நிறுவனங்களிலிருந்து வியாபார அடிப்படையில் வீதவரி அறவிடாது குடியிறுப்பு அடிப்படையின் கீழ் அறவிடுவதால், 60 ஆதனங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 203,905 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கணிப்பீடொன்றின் மூலம் தற்போது அனைத்து ஆதன வித்தியாசங்களின் தகவல்களை சேகரிக்கப்பட்டுள்ளதுடன்,எதிர்காலத்தில் தற்காலிக மதிப்பீடொன்றினூடாக அறவீடு செய்கிறேன். | ஆதனங்களின் தன்மையின் மீது வீதவரி கணக்கிட்டு சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு விதவரி அறவிட வேண்டும். |

(ஆ) நீர் கட்டணம்

-------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 207,558,454 ஆன நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 1,000,000 இனை விஞ்சிய 15 நுகர்வோர்களிலிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 53,525,182 தொகை,ஒரு அலகின் நிலுவை ரூபா 500,000 முதல் ரூபா 1,000,000 இடையிலான 16 நுகர்வோர்களிலிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10,056,429 மற்றும் ரூபா 100,000 முதல் ரூபா 500,000 இடைலான 125 நுகர்வோர்களிலிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 23,481,087 தொகை உள்ளடங்கியிருந்தன. | கணக்குகள் பிரகாரம் நிலவும் மீதியை அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதுடன், மென்பொருல் பிரகாரம் காட்டப்படும் மீதி காசு அடிப்படையின் மீது கிடைப்பதனால்,வித்தியாசம் நிலவுவதுடன், எதிர்காலத்தில் பரிசோதித்து சரிசெய்வதென. | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். |
| (ii) | வியாபார நிலையங்களிற்காக நீர் வழங்கல் கட்டணம் குடியிறுப்பல்லாத அடிப்டையின் மீது அறவிடாது குடியிறுப்பின் அடிப்படையில் அறவிடுவதனால், 26 வியாபார அலகுகளிலிருந்து மீளாய்வாண்டு சனவரி முதல் ஜுலை வரை கிடைக்க வேண்டிய ரூபா 415,309 ஆன நீர் கட்டண வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | நீர் கைத்தொழில் பொறியியலாளரின் தலைமையில் கள பரிசோதனையொன்றை மேற்கொண்டுள்ளதுடன், அப் பரிசோதனை அறிக்கை பிரகாரம், வியாபார அலகுகள் அடிப்படையில் நீர் கட்டணம் திருத்தப்பட்டுள்ளது. | சரியான அடிப்படையின் மீது நீர் கட்டணத்தை அறவிட வேண்டும். |

(இ) வாடகை

---------------

கடையறை வாடகை

-------------------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் சபைக்கு சொந்தமான புகையிரத நிலைய பாதை புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் காணப்படும் 262 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை கடையறை வாடகை ரூபா 17,809,450 அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் 34 கடையறைகளிலிருந்து 05 வருட காலத்தை | நிலுவை தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டு கடை உரிமையாளர்களுக்கு இறுதி கட்டளை அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அறவிட | நிலுவை கடை வாடகை கட்டணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்சி அறவிட வேண்டிய மீதி ரூபா 554,898 உள்ளடங்கியிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படுமென. | |
| (ஈ) | ஏனைய வருமானம் | | |
| (i) | மாநகர சபைக்கு சொந்தமான 08 பொது மலசலகூட தொகுதிகளை குத்தகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 7,168,543 யினை 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிட்டிருக்கவில்லை. | ஒரு பகுதியை செலுத்தியுள்ளதுடன், எஞ்சிய தொகையை மாதாந்தம் செலுத்த குத்தகையாளர்கள் உடன்பாட்டை தெரிவித்துள்ளனர். | நிலுவை தொகையை விரைவில் அறவிட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்ணம் ரூபா 18,656,033 ஆனதுடன், அம் மீதியினுள் 921 முச்சக்கர வண்டிகளிற்குரியதாக 03 ஆண்டு முதல் 05 ஆண்டுகளிற்கு இடைலான கால வீச்சலவை விஞ்சி அறவிட வேண்டிய ரூபா 18,182,827 உள்ளடங்கியிருந்தது. | வழக்கு தாக்கல் செய்வதன் மூலம் ஒரு பகுதியை அறவிட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தகவல்களை கண்டறிய முடியாத முச்சக்கர வண்டிகளிற்காக செம்மையாக்கல் செய்வதென. | நிலுவை முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர கட்டணம் அறிவிட வேண்டும். |
| (உ) | அறிவித்தல் பலகை வருமானம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 02 டிஜிடல் அறிவித்தல் பலகைகளுக்காக அறவிட வேண்டியரூபா 4,096,291 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஊ) | வாகன தரிப்பிடங்களை வாடகைக்கு வழங்கும் வருமானம் | | |
| | 2009 ஆண்டு முதல் நிலவிவரும் சபைக்கு சொந்தமான கண்டிவாகன தரிப்பிடத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 200,567,833 வாடகையை மீளாய்வண்டு இறுயிளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக வழக்கு நடவடிக்கையொன்று நடைமுறையில் உள்ளதாகவும், குறித்த தரப்பினருக்காக அவ்வப் போது அறிவித்துள்ளதென. | நிலுவை வாகன தரிப்பிட வாடகையை அறவிட வேண்டும். |
| (எ) | 2018 ஆண்டு முதல் சுற்றுலா தகவல் மத்திய நிலையித்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 600,000 தொகையொன்றை மீளாய்வாண்டு இறுதியளவில் 04 ஆண்டுகளிற்கு அதிக காலமொன்று கடந்திருந்த போதும், அறவிட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தரப்பினரை அழைப்பித்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியதுடன், எதிர் காலத்தில் பகுகளாக அறவிட உடன்பாட்டிற்கு வந்துள்ளதென. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சர்சைக்குறிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் குடா ரத்வத்த பாதையில் பெட்டி மதகை நிரிமாணிக்கும் வேலையை செயற்படுத்துகையில் தெரிவு செய்த ஒப்பந்ததாரர் குறித்த நிர்மாணத்தை மேற்கொள்ளுவதற்கு இடையில் முறையான அங்கீகாரமின்றி சபைக்கு சொந்தமான எக்ஸவேட்டர் இயந்திரமொன்றை நிர்மாண பணிகளிற்கு பயன்படுத்தும் போது விபத்திற்கு உள்ளாகியிந்தது. பின்னர் இவ் இயந்திரத்தை திருத்த மற்றும் இவ் இயந்திரத்தால் மேற்கொண்ட கொஹாகொட கழிவுக் கொட்டிலில் கழிவுகளை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு பெற்ற இயந்திரத்திற்காக ரூபா 22,044,548 ஆன மாநகர சபை நிதியத்திலிருந்து செலுத்தியிருந்த போதும், காப்புறுதி மூலம் அல்லது பரிசோதனை மேற்கொண்டு பொறுப்தார தரபினரிடமிருந்து குறித்த தொகையை அறவிட்டிருக்கவில்லை. | பிரதேச மக்களின் தேவைப்பாட்டின் மீது கருத்திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு நிலவியது. வேலையை செய்து கொண்டு செல்லுகையில் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள இயந்திர மணித்தயான அளவுகள் முடிவடைந்திருந்ததனால், மீண்டும் மணித்தியாள அளவை நீடித்துக் கொள்ள சபை அங்கீகாரம் கிடைக்கும் வரை மாநகர சபைக்கு சொந்தமான இயந்திரத்தை ஈடுபடுத்திதுடன், குறித்த நிகதியில் அதிக மழை காரணமாக இவ் விபத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. | இவ்வாறான வேலைகள் சரியான மேற்பார்வை மற்றும் உரிய கவனத்துடன் செயற்படுத்த வேண்டியதுடன், விபத்து தொடர்பாக பொறுப்பபுதார தரப்பினரை இனங்காண வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாநகர சபைக்கு சொந்தமான திருத்தி பயன்படுத்த முடியுமான ரூபா 10,446,987 ஆன மண்வெட்டும் 02 இயந்திரங்களை திருத்தம் செய்யாது மற்றும் அதிக மழையான நாட்களில் இடர்களிற்குட்படும் ரூபா 2,950,000 ஆன அருப்பள கிளை வாசிகசாலையையும் திருத்த செயற்பாடுகளை மேற்கொள்ளாது 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக, பெறுமதியை | மண்வெட்டும் 02 இயந்திரங்களை ஏலவிற்பனையில் விற்க பத்திரிகை அறிவிதல் பிரசுரித்துள்ள போதும், இதுவரையும் மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளும் தாமதம் காரணமாக அனைத்து நடவடிக்கைகளும் தாமதித்துள்ளன. | சொத்துக்களை பயனுள்ளவாறு பயன்படுத்த வேண்டும். |

கணக்கிடாத தளபாடங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் 10 விடயங்கள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான கால வீச்சளவினுள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின.

### 3.3 ஒப்பந்த நிருவாகக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| சபைக்கு சொந்மான கடுகஸ்தொட்டை 04 வலய அலுவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குரிய கொடுப்பனவு பட்டியல்கள் பிரகாரம் மேற்கொள்ளாத வேலைகளிற்காக ஒப்பந்ததாரருக்கு மேலதிகமாக செலுத்தியிருந்த ரூபா 81,285 ஆன தொகையை மீண்டும் அறவிட்டிருக்கவில்லை. | இறுதி பட்டியல் தயாரிக்கும் போது தயாரிக்கும் போது குறைத்துக் கொள்வதாக அறவித்துள்ள போதும்,இதுவரையும் இறுதி பட்டியல் சமர்பிக்கப்படவில்லை. | மேற்கொண்ட வேலைகளிற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். மேலதிக கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| (அ) மாநகர சபையின் ஒரே பிரிவில் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக கடமைபுரியும் 190 அலுவலர்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவ் அலுவலர்களுக்கு உள்ளகவாறியான அல்லது வெளிவாறியான இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 05 ஆண்டுகளிற்கு அதிகமான அலுவலர்களை இடமாற்றுவதற்கான தீர்மானம் எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த இடமாற்ற கொள்கையொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்தல் | | |
| அரச சேவை ஆணைக்குழுவின், 2019 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 03/2019 சுற்றறிக்கைக்கு இணங்காதவாறு ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் கடமையில் ஈடுபடுத்தி கடந்த ஆண்டு நவம்பர் முதல் மீளாய்வாண்டு செப்டெம்பர் வரையான ஒப்பந்த காலத்திற்காக ரூபா 486,420 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், முறையான அங்கீகாரம் கிடைக்கும் வரை விஷேட கருத்திட்டத்தின் கீழ் கடமையில் ஈடுபடுத்தி படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. | ஓய்வு பெற்ற ஊழியர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது குறித்த சுற்றறிக்கை மற்றும் விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |